அந்த காதல்

நா.காமராசன்

அமுதோன்

T.P.M

சூரியகாந்தி

R. SHANMUGAM
M.A., M. LITT., DIP. ANTHROP (MADRAS)
M.A. LINGUISTICS (CORNELL UNIV., U. S. A.)
Reader in Dravidian Languages
Department of Languages,
MADURAI UNIVERSITY,
MADURAI 2. (India.)

நா. காமராசன்

விற்பனை உரிமை,
தமிழ்ப்புத்தகாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

பாவைப் பதிப்பகம்
இராயப்பேட்டை :: சென்னை-14

காமராசன் கவிதைகள் —
முதல் தொகுதி
முதற் பதிப்பு : 1971

விலை ரூ. 1·50

புத்தகம் வேண்டுவோர்
தொடர்பு கொள்க :

நா. காமராசன்
11/16, பீட்டர்ஸ் ரோடு காலனி
சென்னை-14

அச்சிட்டோர் :
ஸ்ரீ பி.எல்.எஸ். பிரஸ்
'திருமலை'
சென்னை-24

மு. கருணாநிதி
முதலமைச்சர்
அரசுத் தலைமைச் செயலகம்
தமிழ் நாடு, சென்னை—9
27—4—1971

அணிந்துரை

ஒல்லியாக ஒடிந்து விழுவதுபோன்ற உடல்வாகும், மெல்லிய குரலில் தயங்கித் தயங்கிப் பேசும் அடக்க வுணர்வும், கவர்ச்சியுள்ள காந்தக் கண்களும், கலைந்த தலை யுடன் இலட்சியக் கனவுகாணும் பரந்த முகமும் கொண்டு... புறத்தோற்றத்தில் குமுறும்முன் எரிமலைபோல் சாந்தமாகக் காணப்படுகின்ற இந்தக் காமராசன் என்னும் மாணவர் ஆறுண்டுகட்கு முன்னரே எவ்வளவு பெரிய புரட்சிக் காரராக இருந்தார் என்பதை எண்ணிடும்போது எனக்கு வியப்பாகவே இருக்கிறது.

இவரது கவிதை நடையே தனித்தன்மை வாய்ந்தது! சொல்லும் கருத்தை வலியுறுத்துவதற்காகச் சில புதிய சொற்களையும், வடமொழி வார்த்தைகளையும் வலிவுடன் அடுக்கிக் காட்டுவது இவருக்கு வாடிக்கை.

என் அண்ணன் வகுத்த கவிஞர் வட்டத்திற்குள் வளையவரும் இந்த நண்பர் ஒரு புரட்சிக் கவிஞர் என்பது இவரது படைப்புகளைக் காணும்போதே விளங்குவதால், நான் வேறு தனியே கூறவேண்டாமென விடுக்கின்றேன்.

அன்பன்
மு. கருணாநிதி
(ஒப்பம்)
27—4—1971

சூரியகாந்தி விமர்சனம்!

கி. ராஜநாராயணன்

இந்தக் கவிதைத் தொகுதியில்.....இங்கே ஒரு கவிஞனின் குரலைக் கேட்கிறேன். அது என் மனசைத் தொடுகிறது; வருடுகிறது.

சில கவிதைகள் சோகத்தால் மனசைப் பிழிகிறது.

சிலது வெயில்காலத்துச் சாரல்போல் உள்ளத்தைக் குளிர்விக்கிறது.

கவிஞன்.....வசனகர்த்தாவைப்போல நம் காதருகே வந்து குசுகுசுப்பதில்லை. சிலவற்றை அவன் முரசறைந்து சொல்வான்; சிலவற்றைக் குரலெடுத்துப் பாடி உணர்த்துவான்.

கவிதையின் மகத்துவமே தனி.
கோடையில் மலையின் குகைக்குள்ளே
குளிர்ந்த சுனைத் தண்ணீரில்
ஆடிக் குளிப்பதுபோல
அது ஒரு தனீ ஆனந்தம்!

* * * *

நண்பர் நா. காமராசனின் கவிதைகளில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

'தாமரை மடல்' கவிதையில் தாமரைப்பெண் சொல்லுகிறதாக அமைந்த ஒரு பகுதி:

''.....
கருக்கிருட்டை அழிப்பவரே!
யானைக் கொம்பாய்க்
குருத்துவிடும் வெண்ணிலவுக்(கு)
ஒளிவெள்ளத்தைக்
கொடைப் பொருளாய்க் கொடுப்பவரே,
உம்மேல் காமக்
கருத்து வளர்த்துக் கொண்டு
வெப்பம் போக்கக்
கழுத்தளவு நீருக்குள்
இருக்கின்றேன் நான்'

வார்த்தைகள்.....எப்படி வந்து சொகமாய் விழுகிறது பார்த்தீர்களா!

* * * *

'காட்டாறு' என்கிற கவிதையில் அருவியைக் குறிப் பிடும் ஓர் இடம் வருகிறது.

எத்தனையோ கவிஞர்கள் அருவியை வர்ணித்திருக் கிறார்கள்.

'கீழ்நோக்கிப் பாயும் புகை' என்கிறார் ஒருவர்.

'எழுந்து நிற்கும் நதி' என்கிறார் ஒருத்தர்.

இங்கே நம்முடைய கவிஞர்,

'மலைமகள் உலர்த்தும் மாநெடுங் கூந்தல்
நீயென நினைத்தே, காட்டு மரங்கள்
உன்மேல் பூக்களை உதிர்க்கின்றனவோ?'

என்று சொல்லுகிறார்.

கவிஞர்களால்தான் இப்படியெல்லாம் வர்ணிக்க முடியும்.

கவிஞனைக் காலத்தின் குரல் என்று சொல்லுவார்கள். 'ரத்த புஷ்பங்கள்' என்கிற ஒரு கவிதையில் இந்தக் கவிஞரின் குமுறும் துக்கத்தைக் (சோவியத் ருஷ்யாவும் நவசீனமும் மோதிக்கொண்டதை) குறியீடாக வெளியிடு கிறார். இப்படித்தான் நான் முதல்முதலில் இந்தக் கவிஞரை அறிந்து கொண்டேன். உடனே இவர் என் மனசில் ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

கவிஞர்களின் மனம் மிகவும் மென்மையானது. ஜப்பானிய ராணுவம் சீன மண்ணில் (இப்பொழுது 'சுதந்திர பங்களாதேஷ்' மக்களைப் பாகிஸ்தான் ராணுவம் கொடுமை செய்வது போல) அப்போது அங்கே செய்த அழிச்சாட்டி யத்தை, தினம் தினமும் கேள்விப்பட்டுக் கேள்விப்பட்டு, கவி ரவீந்திரநாத தாகூர் மனம் புண்பட்டுப் படுக்கையில் வீழ்ந்து விட்டாராம்.

எங்கோ நடந்த ரஷ்ய - சீன மோதல் இங்கே ஒரு கவிஞனின் மனசில் வந்து *'பொண்டாம்' வைக்கிறது.

---

*'பொண்டாம்' - புரையோடுதலினால் ஏற்படும் சீழ்ப் பொந்து (வட்டார வழக்குச்சொல்.)

கவியுள்ளம் அப்படியெல்லாம் துன்பமுறும்! அது ஏழை மக்களின் துன்பத்தைக்கண்டு அழும். சில சமயம் அவர்களைப் பார்த்து, 'பொங்கி எழுங்களேண்டா!' என்று அறை கூவும். கவிஞர்களைக் கொண்ட நாடு பாக்கியம் உடையநாடு.

சூரிய காந்தி என்கிற இந்தக் கவிதைத் தொகுதியை கவிஞர் காமராசன் தமிழ் மக்களின்முன் வைக்கிறார்.

இப்பொழுது பத்திரிகைகளில் வருகிற கவிதைகளையெல் லாம் வைத்துப் பார்க்கிறபோதும் — கவிதைப் புத்தகங்களை யெல்லாம் பார்க்கிற பொழுதும்—

இந்தக் கவிஞருக்கென்று ஒரு 'தனித்துவம்' நிறைந்து விளங்குகிறதைப் பார்க்கிறேன்.

கவிஞர் காமராசனுக்கு மிகச் சிறந்த எதிர்காலமும் வரவேற்பும் நிறைந்திருக்கிறது என்பதில் எனக்குச் சந்தேக மில்லை.

கி. ராஜநாராயணன்
(ஒப்பம்)
23—4—1971

சுயபுராணம் - 1

1965 முதல் 1968வரை நான் எழுதிய கவிதைகள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. எனது கவிதைகளை ஆரம்பநாட்களிலேயே ஆர்வமுடன் வெளியிட்ட திருவிளக்கு இதழுக்கும், முதன்முதலில் என்னை ஒரு கவிஞனாகத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கும் என் நன்றி.

எனது இலக்கிய ஆசானாகிய அண்ணாவிற்கும், நெஞ்சிலே சோர்வு பூசும் அவருடைய எத்தனையோ அலுவல் களுக்கிடையேயும் — அவசரமாக நான் நூல்வேலைகளை முடிக்க விரும்பியதால் புத்தகத்தின் மாதிரிப்படியைப்பெற்ற மறுநாளிலேயே எனக்கு அணிந்துரை உவந்தளித்தவரும், எனது பால்யகாலத்திலிருந்தே என்னைத் தன்பால் ஈர்த்துக் கொண்டவருமான தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கும் எனது வணக்கங்கள்.

விமர்சனம் எழுதிய எனது 'செல்ல எழுத்தாளர்' கி. ராஜநாராயணனுக்கு எனது அன்பு.

ஒரே நேரத்தில் சூரிய காந்தி, கறுப்பு மலர்கள் ஆகிய எனது இரண்டு தொகுப்புகள் வந்துள்ளன.

நூல் வெளியீட்டு முயற்சியில் எனக்குத் துணைபுரிந்த சிலம்பொலி சு. செல்லப்பனருக்கும், ஸ்ரீ பி.எல்.எஸ். அச்சகத் தார்க்கும் எனது நன்றி.

எனது கவிதைகளை வெளியிட்ட திருவிளக்கு, முரசொலி, மன்றம், காஞ்சி, தாமரை, காதல், சுரதா, தீபம் இதழ்களுக்கு என் வணக்கங்கள்.

கவிதை இலக்கணத்தை எனக்குக் கற்றுத்தந்த பழங்கவிஞர், பொடிப்புலவர் கான்முகமது அவர்களின் கல்லறைக்கு இந்தச் சூரிய காந்தியை மானசீகமாகச் சமர்ப் பணம் செய்கிறேன்.

அன்புள்ள

27—4—71 நா. காமராசன்

இதயக் குரல்

கிளிமூக்குத் தீநாக்குக் கவிதைகளால்
கிளர்ச்சிகளை வளர்ப்பவன் நான்;
தளிர்க்கவியைச் செடிகளிலே எழுதுகின்ற
தங்கஇள வேனிலைப் போல்
ஒளிப்புலவன்; உயர்திணைச் சொற்கள் தேக்கி
உயிர்க்கவிதைப் பயிர் வளர்ப்போன்
வளியோசைப் பாட்டோசை விடுதலைக்கோர்
வழிவகுக்கும் என வகுத்தோன்.

திராவிடத்துத் தமிழென்னும் புதையலின்மேல்
தீராத ஆசை வைத்தோன்;
பராபரத்தைப் பாராத முகத்தை வாழ்த்தும்
பச்சைநாத்திகன் நான்; தங்கக்
குராஅனைப்போல் விதவைமணம் வேண்டுமென்று
குரல் கொடுப்போன்; மணல்வீடான
அரேபியாவின் திராட்சைகளைக் கவிதைகளாய்
அறிமுகம் செய்கின்றவன் நான்.

*களம் நோக்கி

பன்னீர்ப்பூ நிறநிலவே! வெண்ணிலவே!
பால்வட்ட நிலவே! வெள்ளைக்
கன்னத்தில் கறுப்புமச்சம் பெற்றிருக்கும்
காதலியே! போதை மாதே!
மன்னிப்பு விண்ணப்பம் அனுப்புகின்றேன்;
"வானநாட்டின் கிளியோ பாத்ரா"
என்றுனது புகழ்பாடிக் கொண்டிருக்க
இனிமேல்நான் வரவே மாட்டேன்.

பனியிரவில் இனிப்பேற்றிப் பவனிவரும்
பனிக்கட்டித் தட்டே! வானக்
கனிப்புலவன் எழுதிவைத்த கவிதைகளுள்
கதிரவனை புறநா னூறு;
தனித்தனியாய் மின்னுகின்ற விண்மீன்கள்
சிற்றிலக்கி யங்கள்; நீயோ
இனிப்புவரி அகநானூறு என்றெழுத
இனிமேல்நான் வரவே மாட்டேன்.

---

*ஒரு விடுதலை வீரனின் பாடல்.

நதிநடனம், காற்றினில் ஏற்றுமதியாகும்
நறுமணங்கள், குயில் கூட்டத்தின்
அதிரசப்பாட்டு அதிர்வேட்டுப் பேச்சிவற்றை
அணைத்திருக்கும் தாயகத்தை
மதிமயக்கும் பொன்மண்ணை மானவீட்டை
மறுபடியும் பெறத்தான் வேண்டும்;
கதிர்மதியே! உனைப்பாட நேரமில்லை,
களம்நோக்கிப் போக வேண்டும்.

நெருப்பு மறவன்

கண்மணித் தமிழைக் காக்கக்
கனலிடை ஆவி நீத்த
திண்மணித் தோளா, உன்றன்
திருவுடல் தன்னை யிந்த
மண்மகள் கவர்ந்த பின்னுல்
மங்கையர் தந்த இன்பம்
மண்ணிலே இல்லை; பூவில்
மதுவினைக் காண வில்லை.

என்மனம் உருகுதையா!
என்னினிச் செய்வேன்? மானச்
சின்னமே, சின்னச் சாமி
செயல்மறப் புலியே, உன்னை
என்விழி கண்ட தில்லை
என்பதை எண்ணி எண்ணிப்
பன்முறை நொந்த பின்என்
பாடலைப் புலம்ப விட்டேன்.

"எந்தையர் தினித்த போதும்
இந்தியை எதிர்ப்பேன்" என்னும்
மந்திரம் சொன்ன வாயை
மண்டிய தழலுக் குள்ளே
தந்திடத் துணிந்தாய்; எங்கள்
தங்கமே, உன்னை மீண்டும்
தந்திட முடிந்தால் என்றன்
சரித்திரம் முடித்துக் கொள்வேன்.

தாமரை மடல்

கருத்திருட்டை அழிக்கின்ற அறிஞரைப் போல்
கருக்கிருட்டை அழிப்பவரே, யானைக் கொம்பாய்க்
குருத்துவிடும் வெண்ணிலவுக் கொளிவெள்ளத்தைக்
கொடைப் பொருளாய்க் கொடுப்பவரே, உம்மேல் காமக்
கருத்து வளர்த்துக்கொண்டு வெப்பம் போக்கக்
கழுத்தளவு நீருக்குள் இருக்கின்றேன் நான்;
நெருப்புக் கண்கொண்டவரே, உம்முடம்பில்
நேர்பாதி எனக்களித்தென் பதியாவீரோ?

சுடும்கதிர்கொள் ஆதவரே, என்னைத் தொட்டுச்
சுகலயம் கொள்ளா தவரே, உம்மை எண்ணல்
கொடும்பாவி என்தவறே! வான வீட்டில்
கொதிப்பவரே, கொதிக்கின்றேன் குளிர்நீரில் நான்!
நெடும்புவியை வாழவைக்கும் ஆற்ற லே, என்
நெஞ்சத்தில் வாள்வைக்கும் கூற்றே, உம்மைத்
தொடும்கைகள் எனக்கில்லை; இருந்தால் என்றோ
தொட்டிருப்பேன்; கற்றிருப்பேன் பருவப் பாடம்.

மாலை

காலைமுதல் வெயில்வளர்த்த வெய்யோன் கொஞ்சம்
கண்மயங்கி நிற்கின்ற மாலை நேரம்;
சாலைகளும், மரநிழலும் தங்கள் இன்பச்
சந்திப்புச் சரித்திரத்தை வளர்க்கும் நேரம்;
பாலைவெயில் மருதநிழல் ஆன தைப்போல்
பாரெங்கும் ஒருமயக்கம் படரும் நேரம்;
சோலைப்பூக் காதுக்குள் வண்டு வந்து
சோகத்தை நீக்கென்று சொல்லும் நேரம்;

ஏர்பட்ட நிலத்திற்கும் உழவ னுக்கும்
ஏற்பட்ட உறவழியும் நேரம்; அன்னைன்
வேர்வைக்கு விழாவெடுக்கும் தைமா தத்தில்
விளைகின்ற கரும்பைப்போல் இனிக்கும் நேரம்;
பார்வை மங்கும் நேரத்தில் நிலவு வந்து
பால்வெளிச்சம் கொட்டுகின்ற நேரம்; கங்குல்
போர்வைக்குள் போர்வையம் உறங்க எண்ணிப்
புதுமயக்கம் வளர்க்கின்ற போதை நேரம்;

பார் பச்சைப் புல்முடியில் மகுட மாகப்
பனித்துளியை அணிகின்ற ஈர நேரம்;
கார்மேகம் மழையாகும் வான வீடு
கபிலனது தோழன்கை ஆகும் நேரம்;
நீர்க்குளத்தின் ஈரத்தைத் தாண்டி மேலே
நீண்டிருக்கும் தண்டுடைய அல்லித் தண்பூ
போர்க்களத்தைக் காதலிக்கும் மறவ னைப்போல்
பொன்னிலவைக் காதலிக்கும் மாலை நேரம்.

தண்ணீர்ப் படை

காலைப் பொழுதில் வெய்யோன் வேலைப் பொழுதில் — குளிர்
காற்றுச் சதிரில் முகில் கட்டுண்டது— அது
கண்ணீர்ப் பிரசவம் கொண்டது—வெயில்
கீற்று வெடித்தநிலம் நீருண்டது—ஒரு
கிழக்கு விளக்கு துயில் கொண்டது

வாகைக்கரிகால் வளவன் கால்போல் மேகம் கறுத்தது—கடை
ஏழுவள்ளலார் விரித்த கொடைக் கடை வானி
லிருந்தது—விதை
எழுதும் பயிர்ப்பாட்டை எழுதிமேற்செல மழை"மை"
கிடைத்தது—தினம்
கூழும் துவையலும் கூடும் வயிற்றிலோர் குதூகலம்
முளைத்தது—அவர்
கோழைக் கனவிலோர் வீரம் தழைத்ததால்
கொடுமை இளைத்தது

சூடுபிடித்த மண்ணை ஈரவாடை பிடித்தது—கவிச்
சோதிக் கொழுந்தாய் எழுந்த மின்னல் வானில்
நடந்தது—மலர்
பாதிக்கனவுடன் நனைந்தது வண்டெழுந்து
பறந்தது—நடை
பாதையெல்லாம் வெப்பம் தொலைந்திடத் தண்ணீர்ப்
படைவந்தது!

உடல் மரணம்

(மதுரைத் தெப்பக்குளம்பற்றிய கவிதை)

நிற்கின்ற தெப்பம்நீ; ஓடும் நீரும்
நிற்கின்ற நீர்நிலைநீ; ஓடம் மட்டும்
விற்கணைபோல் ஓடுகின்ற தண்ணீர்ப் பாதை.
விரற்கணையாழியைப்போல நீர்க்கு மிழ்கள்
நிற்காத வட்டமிடும் சதுர ஏரி;
நீந்துகின்ற மீன்குலத்தை வளர்க்கும் நீர்நீ;
கற்கரையைப் பெற்றுள்ளாய்; கல்வி யாற்றின்
கரையான கல்லூரிக் கருகில் உள்ளாய்.

தன்னிழலைத் தண்ணீரில் விழவைக் காமல்
தண்ணிழலை வளர்க்கின்ற மண்ட பத்தை
உன்னகத்தே பெற்றுள்ளாய்; அங்கே நல்ல
உறக்கத்தை வைத்துள்ளாய்; தென்றல் காற்று
மென்மலரைக் கொஞ்சுதற்கும், காலை யர்கள்
மெல்லியரைக் கொஞ்சுதற்கும், மேவும் அந்த
மண்டபத்தின் நிழல்மடியில் கவிதைப் பாட்டின்
மண்டபத்தை நெஞ்சத்தில் எழுப்ப வேண்டும்.

வெயில்வளரும் பகற் பொழுதில் கூட அந்த
வெயிலுக்கே குடியுரிமை மறுக்கப்பட்ட
அயல்நாட்டில், நிழல்நாட்டில், அங்கே அந்த
அலைதழுவும் மண்டபத்தில் எனது கைகள்
புயல்போலக் கவியெழுத உரிமை வேண்டும்;
புதுத்தென்றல் வீசுகின்ற மாலை நேரம்
கயல்மீன்கள் குதிக்கின்ற குளத்தை ஒட்டிக்
கரைமட்டும் நிற்கின்ற அமைதி வேண்டும்.

பகல் மரணமூச்சுவிடும் நேரம் என்றன்
பாட்டை,உயிர் மூச்சை நான் வளர்க்க வேண்டும்;
அகல்விசும்பைப் பற்றியுள்ள இருளின் கூட்டம்
அழிந்தொழிய வேண்டும்;தேன் நிலவு வந்து
மகமதியர் ஆட்சியினைப் பரவ வைத்த
மாமன்னன் அக்பரைப்போல் ஒளிவெள்ளத்தை
அகிலத்தில் பரவவைக்க வேண்டும்; அந்த
அரவணைப்பில் நான்கொஞ்சம் மயங்க வேண்டும்.

பனிமாவைப் பூமுகத்தில் பூசி நிற்கும்
பசுமரத்தின் இலைநாக்கை வளர்க்கும் நீரைத்
தனியாக நான்மட்டும் பார்க்க வேண்டும்;
தண்ணீரில் விழிமீன்கள் குதிக்க வேண்டும்;
கனிபோலச் சுவையூறும் எண்ணக் கோவைக்
கனிபழுக்க அதைக் கவிதைக் கிளிகொத்திப்போய்
மனிதமனம் செல்லாத கற்பனைக்குள்
மறைகின்ற நிலைஒன்று மலர வேண்டும்.

பகைக்கூட்ட ஆர்ப்பாட்டம் இந்த நாட்டின்
பகல்வெளிச்ச வாள்வெளிச்சம் கண்டு, காட்டில்
திகைப்பூண்டை மிதித்தவன்போல் திகைத்துப் போன
தேன் செய்திப் பட்டியலைப் பார்க்கவேண்டும்;
சுகக்காற்றை உருவாக்கும் மரத்தின் கீழே
சுனைநீர்போல் வளர்கின்ற நிழலில் என்றன்
அகப்பாட்டை எழுத்தாக்க வேண்டும்; பின்னர்
அங்கேயே உடல்மரணம் எய்த வேண்டும்.

*இதம்பாடல்

"திங்கள் நீ, வானம் நான்; இந்த நட்புத்
தேயாமல் மறையாமல் இருக்கும்," என்றே
பொங்கலுக்கு வாழ்த்தனுப்பி வைத்தாய்; அன்புப்
பொங்கலுக்கு வழிவைத்தாய்; விழிவைத் துள்ள
மங்காத கனவுகள்போல் என்னுள் ளத்துள்
மயக்கநீச்சல் செய்கின்ற எண்ணங் கள்போல்
எங்கேநான் சென்றாலும் நினைவிற் குள்நீ
இருக்கின்றாய்; உருக்கத்தைப் பெருக்கு கின்றாய்.

உழுந்துண்ணும் புள்ளிமான்கள் துள்ளித் துள்ளி
உலவிக்கொண் டிருக்கின்ற குரங்க ணிக்குள்
உழுதுண்ணும் குலத்துக்கோர் புள்ளி மானாய்
உலவிக்கொண் டிருப்பவளே, உயிரின் வீடே,
விழுதுவிடும் ஆலமரப் பழச்சி வப்பை
விஞ்சுகின்ற சிவப்புதட்டால் கொஞ்சும் வஞ்சி!
பழுதுபடா ஓவியமே, ஆடுகின்ற
பச்சைமயில் போன்றவளே, பருவப் பெண்ணே!

---

*முகவை மாவட்டத்தில் 'இதம்பாடல்' என்றொரு ஊருண்டு. அந்த ஊரே தலைப்பாகி உருவாக்கிய காதல் கவிதை இது.

அடிவான விண்மீனே, அடிஎன் கண்ணே,
அடிக்கரும்பின் இனிப்பே, என் முழு நினைப்பே,
பிடிவாதப் போக்காலே வாழ்வில் என்கைப்
பிடித்த மானே, எனக்கு மிகப் பிடித்த மான
கொடியிடையை உடையவளே, கரிகாற் சோழன்
குடை நிழல்போல் குளிர்ந்திருக்கும் நிலாநேரத்தில்
குடிபோதை இதழ்க்கூட்டம் சந்தித்தால்தான்
குடிவளர்க்கும் பிள்ளைநிலாக் கொழுந்து தோன்றும்.

முல்லைப்பூப் போன்றவளே, பவளம் காக்கும்
முல்லைக்கா டுடையவளே, விளைந்து நிற்கும்
நெல்லைப்போல் நாணுகின்ற பெண்ணே, பாரில்
நீலமழை பெய்திருக்கும் பிரான்சு நாட்டின்
எல்லைக்குள் இல்லாத அழகே, அன்பே,
ஏக்கத்தின் தாயகமே, நீரில் மூழ்கும்
கல்லைப்போல் உன்னழகில் மூழ்கி உன்றன்
கட்டழகைத் தொட்டளக்க விரும்பு கின்றேன்.

நான் இங்கே, நீ அங்கே இடையில் சோக
நதிபவனி வருகிறது; நீரில் துள்ளும்
மீன் எங்கே? மண்புழுதான் எங்கே? ஆண்மை
மீசைவைத்த தமிழனெங்கே? பேடி எங்கே?
கான்எங்கே? கட்டழகுச் சிற்றூர் எங்கே?
கனிமொழிநீ எங்கே? நானெங்கே? நீல
வான்எங்கே, மலைஎங்கே இருந்தாலென்ன?
வாழ்விற்குள் இதம்பாடல் இருக்க வேண்டும்.

சோலை வழி போனரோ?

வாழையிலை பந்தலிடும் வாசலிலே நேசருக்காய்
ஏழைவிழி காத்திருக்க எங்குதுரை போனரோ?
பச்சரிசிச் சோருக்கிப் பாகற்காய்க் குழம்பு வைத்தே
இச்சையுடன் காத்திருக்க எங்குதுரை போனரோ?

மான்விழிக்கு நேராகி மையலுக்கும் ஆளாகித்
தேன்மொழிக்குத் தேனனை தெய்வதுரை போன
தெங்கே?

அல்லிவிழிப் பார்வைக்கோர் அர்ச்சுனராய்த் தோன்றுகிற
கொல்லிமலை மகராசர் குற்றுலம் போனரோ?

பூவாடிப் போகுமுன்னல் பூமாலை வேண்டுமென்று
காவாடிப் போகுமுன்னல் கைமாலை வேண்டுமென்று
அம்புலியைப் போலே ஓர் ஆண்மகனைப் பெற்றதுரை
கும்மிருட்டுப் போனவுடன் கோலவனம் போனரோ?

சூரியனர் எழுந்துவரும் சூட்டோடு கோவிலுக்குக்
காரியங்கள் செய்வதற்காய்க் கருதியவர் போனரோ?
அப்பளப்பூப் பொரிச்சுவச்சு ஆசையுடன் காத்திருக்க
சொப்பனப்பூ விழியழகர் சோலைவழி போனரோ?

காந்தி

முதற் கவிதை

எண்ணக் கிறுகிறுப்பில் ஏக்கச் சுழிப்புகளில்
கண்வளர்க்கும் மாயக் கனவுகளின் சந்திப்பில்
புண்பட்டுக் காதல் புயலில் அடிபட்டு
விண்மின்னல் பாடுபடும் வேதனையைப் பாடுகிறேன்.

வேனில் இளங்காற்றே, வேகத் திரைக்கடலே,
கூனியிருக்கும் குளிர்பிறையே, கேளுங்கள்
மோகத்தை முன்நிறுத்தி மோனத்தைப் பாழ்படுத்தி
சோகத்தை விலைகொள்ளும் சூனியரே கேளுங்கள்!

பொன்னுருக்கி வார்த்தெடுத்த பூவை உடலென்று
தன்னுருக்கம் தோன்றத் தணல்கவிதை தான்படைக்கும்
தென்னகத்துப் பொய்ப்புலவீர், தேம்பல் ஒலிகளையே
முன்னிறுத்திப் பாடவிட்ட முதற்கவிதை கேளுங்கள்!

ஏழைக் குரல்

அவரைப்பூப் போல்சிவந்த மேனி பெற்ற
அவரைப் பூவிழியாலே பார்த்தேன்; ஏதோ
சிவனைப்போல் அவர்மாறி உடம்பில் என்னைச்
செம்பாதியாய் வைத்துக் கொண்டால் போதும்;
கவலையினுல் ஆள்பாதி யாகிவிட்டேன்;
கண்ணீரால் நாள்பாதி போக்கி விட்டேன்;
குவளைப்பூக் கண்அந்த அத்தான் வந்து
கொஞ்ச நேரம் கொஞ்சினுல்தான் தூங்கும் போலும்!

அம்மானை ஆட்டத்தை நிறுத்தி விட்டேன்
அம்மானை நெஞ்சத்தில் நிறுத்திக் கொண்டு
நிம்மதியாய்ப் பாய்மீதில் உறங்கப் போனுல்
நித்திரைதான் வருகிறதா? நெஞ்சம் கொஞ்சம்
சும்மாதான் கிடக்கிறதா? சோகம் என்ன
சொன்னுலும் கேட்கிறதா? சாவுக் கேனும்
கும்மாளம் போடாமல் என்னை வந்து
கொல்வதற்குத் தெரிகிறதா, அதுவும் இல்லை!

சேரன் காதலி

வஞ்சிக்கோமான் விழிகள் சந்திக் கின்ற
வஞ்சிக்கோ மான்விழிகள்; நெஞ்சை அள்ளும்
தஞ்சைக்கும், மதுரைக்கும் மன்ன னுகித்
தமிழ்வளர்த்த வஞ்சிநகர்த் தலைவன் கொஞ்சும்
அஞ்சுகத்தாள், தாமரைப்பூ முகத்தாள், அந்த
அழகரசி அடலேறு சேரன் மீது
நெஞ்சத்தை வைத்தபடி இருட்டு நேர
நித்திரையை ஒத்திவைத்துக் கொண்டி ருந்தாள்;

பூவாத வஞ்சியிலே பூத்த வஞ்சிப்
பூச்செண்டு சருகாளுள்; கருக லானுள்!
பூஆடிக் கொண்டிருக்கும் சோலை நாட்டுப்
பூவாடிக் கொண்டிருந்தாள்; சேரன் பெற்ற
சாவாலும் சாகாத காத லாலும்
சங்குநிறக் கண்ணீரை வடித்துக் கொண்டே
கூவாத குயிலானுள்; சொல்லை நெஞ்சக்
கூட்டுக்குள் போட்டடைத்தாள்; குமுற லானுள்.

கடிதம்

போ,தம்பீ! உன்னைடு பெரிய தொல்லை
போடுகின்ற மடல்களுக்குப் பதிலே இல்லை;
வாதம்பீ, ஊருக்கு வா,வா என்றேன்,
வாய்மூடிக் கிடக்கின்றாய்; அன்புக் காட்டில்
நீதும்பி, நான்தான் பூ; அதனல் தானே
நின்வரவை எதிர்நோக்கி ஏங்கு கின்றேன்!
சேதாம்பல் பூப்போன்ற இதழில் கொஞ்சம்
சிரிப்பேந்தி நீயிங்கே வரமாட் டாயா?

மங்கைக்குக் கண்ணழகு; துள்ளு கின்ற
மானுக்குப் பேரழகு வெள்ளைப் புள்ளி;
செங்கதிர்க்குப் பேரழகு ஒளிநெருப்பு;
சேய்மீன்கள் தானழகு பொய்கைத் தாய்க்கு;
சங்கிற்கு நிறமழகு; தேய்ந்து போகும்
சந்தனந்தான் மார்பிற்கு அழகு; நல்ல
தங்கநகை கழுத்திற்கு அழகு; என்றன்
தம்பிக்கோ தனியழகு குழந்தைப் பேச்சு!

நொடிக்குநொடி என்னெஞ்சம் உன்னை எண்ணி
நூறுமுறை துடிக்கிறது; துன்பம் என்னை
அடிக்கடி வந்தணைக்கிறது; பாசம் வாழ்வை
அழிக்கிறது; இப்படியே கால மெல்லாம்
துடிப்பதற்கோ எனக்கிங்கே ஆற்ற லில்லை;
துவள்கின்றேன்; என்கதையைச் சாவு வந்து
முடிப்பதற்கு முயல்கிறது; அதற்குள் உன்றன்
முகமலரை ஒருமுறைநான் காண வேண்டும்.

என்னுயிரே, எனைக்காண வருகின் றுயா?
எப்போது என்றெழுது! விரைவாய் உன்றன்
சின்னப்பூ முகம்காண வேண்டும்; பொங்கும்
சிரிப்பொலியை நான்கேட்க வேண்டும்; வெள்ளை
அன்னத்தின் நடைபோல மெல்ல மெல்ல
அண்ணனுக்கு மடலெழுதும் வழக்கம் போதும்;
மின்னலைப்போல் விரைவாக எழுது; உன்றன்
மேனியெனைக் காணுதற்கு வரட்டும், மெள்ள!

வான் மழை

பூவுக்குத் தேனுனன்—அங்குப்
பொறிவண்டுக் கிரையானுன்;
மாவுக்குத் தளிரானுன்—அங்கு
மாங்குயிலுக் குணவானுன்.
வானத்து முகிலானுன்—அங்கு
வசந்தத்தின் கனவானுன்;
வானத்தைப் பிரிந்துவந்தான்—இங்கு
வான்மழையாய் முடிந்தான்.

மன்னர்

வஞ்சியாளும் சேரமன்னர், வஞ்சி யாதிவ்
வஞ்சியாளைச் சேர்ந்த மன்னர்; அத்தான்; நீங்கள்
வெஞ்சமரில் வேல்மன்னர்; வாள்மன் னர்;என்
வேல்விழியில் வாழ்மன்னர்; வாகை மன்னர்;
கொஞ்சுகின்ற மலரிதழ்மேல் அரும்பு மீசை
கொண்டமன்னர்; கொடையருளில் கொண்டல் மன்னர்;
நெஞ்சத்துச் சிப்பிக்குள் கருத்து முத்தாய்
நிலைத்தமன்னர்; நித்திரையை நிறுத்தும் மன்னர்.

யானையைப்போல் கருத்திருக்கும் இருட்டைப் போக்கி
யானைத்தந் தம்போல நிலவு தோன்றும்
வானைப்போல் விரிந்திருக்கும் வாகையூரின்
வரலாற்றை வாள்முனையில் வைத்திருக்கும்
சேனைகளின் ஆணைமன்னர்; புகழ்ப் பெண்ணைப்போய்ச்
சேரஎண்ணும் சேரமன்னர்; செய்யுள் மன்னர்;
மோனையைப்போல் முன்னணியில் நிற்கும் மன்னர்;
மோகத்தைத் தமிழ்மீதும் வைத்த மன்னர்!

மலைமுகட்டில் கொடிபதித்த கையைக் கொங்கை
மலைமுகட்டில், கொடியிடையில் பதித்த மன்னர்;
அலைமுகத்தைக் கொஞ்சுகின்ற நாவாய் போல்என்
அன்புமுகம் கொஞ்சுகின்ற மன்னர்; காமக்
கலைவளர்க்கக் கலைகளையும் கலைமன்னர்; மே
கலைபோல இடையொட்டும் காதல் மன்னர்;
மலைமனத்து மன்னர்; என்மனத்து மன்னர்;
மாமன்னர்; மாறுத வெற்றி மன்னர்!

காதல் நினைவுகள்

கொடை ஆரஞ்சிப்பழங்கள் கொடுத்தான்—காதல்
கொடைகொடுத்தான்; விடைகொடுத்தான் நெஞ்சவேதனைக்கே!
இடையாரம் நெகிழவைத்தான்; ஓர் அணைப்பால்
இதயத்தை நெகிழவைத்தான்; காமப்போர்க்குப்
படையாயிரம் கொண்டுவந்தேன்; கள்வன் எல்லாம்
பறித்துக்கொண்டே என்நெஞ்சும் பறித்துக்கொண்டான்.
உடைந்த கண்ணுடி வளையலைப்போல் சின்னப்பிறை
உருவான நேரம்; என்கைவளை உடைத்துவிட்டான்!

பிடியிடை என்று சொன்னேன்—கைப்
பிடிக்குள்ளே கொண்டுவந்தான்;
முடிதனைக் கோதிவிட்டான்—அதை
முடித்தும்ஓர் அழகு செய்தான்;
அடிக்கரும்பென்று சொன்னேன்—என்னை
அடிக்கடி முத்தமிட்டான்.
விடிவெள்ளி முளைத்ததென்றேன்—கொஞ்சம்
விடியட்டும் என்று சொன்னேன்.

உறக்கமில்லை

உள்ளத்தின் ஓவியமே, உணர்ச்சி யாற்றில்
ஓடிவரும் புதுப்புனலே, உன்றன் எண்ண
வெள்ளத்தில் மூழ்கிவந்த கடிதம் கண்டேன்;
வெண்ணிலவில் மலர்கின்ற அல்லி யானேன்;
துள்ளிவரும் இளங்கன்றின் துடுக்கைத் தூய
தும்பைப்பூ உள்ளத்தை, சிரிப்பு முத்தை
அள்ளிக்கொண் டோடிவிட்டாய்; அழகே, இந்த
அன்பனுடன் உனக்கென்ன பகையோ சொல்வாய்?

இங்கேநான் துடிக்கின்றேன்; ஆசை ஆடு
இதயத்தை மேய்கிறது; இனிப்புப் பேச்சை
அங்கேநீ வடிக்கின்ருய் அன்னே முன்னர்;
அன்பனுக்கோ பிரிவென்னும் கசப்பைத் தந்தாய்;
பொங்கலுக்கோர் உவமைசொலத் தவித்த போது
பொங்கிவரும் கொழுஞ்சிரிப்பைத் தந்தாய்; உள்ளப்
பொங்கலுக்குப் பிரிவுலையை வைத்து விட்டுப்
போய்விட்டாய்; புன்னகையே, மறைந்து விட்டாய்!

இன்னும்நான் சாகவில்லை; ஏதோ இங்கே
இருக்கின்றேன் சருகாக; பூஞ்சி ரிப்பில்
மின்னும்உன் முகங்கான வழியே யில்லை;
மீதியுள்ள பொருள்களிலே ஒளியே இல்லை;
பின்னும்உன் கரங்கூட என்னைவிட்டுப்
பிரிவுக்கே உறவாகிப் போகு மென்று
இன்னும்நான் நினைக்கவில்லை; ஆனல் நெஞ்சம்
இனியவளைத் தேடுவதால் வாடு கின்றேன்.

பிஞ்சுமுகம் பார்ப்பதற்கும், மழலை தூங்கும்
பேச்சழகு கேட்பதற்கும், ஆசையோடு
கொஞ்சுமொழி சொல்வதற்கும், கோபத் தீயின்
கொழுந்துகளை அணைப்பதற்கும் துணையாய் நின்றாய்;
அஞ்சுகமே நீயென்றன் அரசி யானாய்;
அணுத்தோறும் புகுந்தென்னை ஆட்சி செய்தாய்;
நெஞ்சத்தில் நிலைத்துவிட்டாய்; அதனல் என்றன்
நித்திரையின் கனவுகளாய் மாறி விட்டாய்!

சின்ன நடைப் பொன்னடிகள் என்னை விட்டுச்
சிற்றலைபோல் எங்கோடி மறைந்த தம்மா?
புன்னகைப்பூ முகமெங்கே? என்னைக் கண்டால்
பூரிக்கும் விழியெங்கே? கால மெல்லாம்
என்னைமட்டும் நினைக்கின்ற நெஞ்ச மெங்கே?
என்விரலைத் தொடும்விரல்கள் எங்கே? என்னைத்
துன்பமெனும் கடலுக்குள் வீழ்த்தி விட்டுத்
தோணிமட்டும் போனதெங்கே, எங்கே, எங்கே?

அச்செழுத்து நீர்பட்டால் அழிவ தில்லை;
அழகி சிந்தும் புன்னகைகள் மறைவ தில்லை;
பிச்சிப்பூ மணம் என்றும் குறைவ தில்லை;
பெருநிலவும் வானத்தைப் பிரிவ தில்லை;
நச்சுமுட்கள் காய்ந்தாலும் உதிர்வ தில்லை;
நங்கூரம் காற்றடித்தால் நகர்வ தில்லை;
இச்சைகளோ எந்நாளும் குறைவ தில்லை;
இனியவளே, உனை உள்ளம் மறப்ப தில்லை.

காந்தி

இருட்டினிலே நிம்மதியாய் உறங்கப் போனால்
இமைமூட மறுக்கிறது; மணக்கும் காதல்
மருக்கொழுந்தே உன்நினைவு நெஞ்சமெல்லாம்
மணக்கிறது; இனிக்கிறது; அதனால் இங்கே
இருக்கிறது துயரிரவு எனக்கு மட்டும்;
இளைக்கிறது என்னுடம்பு; வானவீதி
கருக்கிறதா வெளுக்கிறதா என்றுகூடக்
காண்பதற்குச் சக்தியில்லை; உறக்கமில்லை.

நிழல்

இலைமரங்கள் தருகின்ற நிழலே, மண்ணை
ஈரம் செய்யாத சேறே, வேனில் நாளில்
தலைதப்பி ஓடிவரும் வழிப்போக் கர்கள்
தங்குகின்ற வாடகையில் லாத வீடே,
நிலையான தண்மையுள்ள எழிலே, வாழ்வின்
நிலையாமைத் தன்மையுள்ள நிழலே, மர்ம
அலைச்சலுக்குப் பேர்போன காற்றின் வாழ்க்கை
ஆரம்பமாகின்ற மரத்தின் சொத்தே!

அந்திமாலை நேரத்தின் ஆரம் பத்தில்
அனுமார்போல் விசுவரூபம் காட்டு கின்ருய்;
சந்திரனைச் சந்திக்கும் இரவும் நீயும்
சாகாமல் இருந்தால்தான் எனது பாட்டுச்
சிந்தனைகள் உயிர்வாழும்; வானில் ஊரும்
செங்கதிரோன் என்ற வெயில் கிருமி செய்யும்
செந்தணல்நோய் போக்குகின்ற மருந்தே, தோப்புத்
தெய்வங்கள் படைக்கின்ற மண் சொர்க் கம்நீ.

சாலைகளில் வெயில்திருடிக் கொண்டிருக்கும்
சரியான பகல்திருடன் நீதான்; வண்ணச்
சோலைகளை மடமாக்கித் தூங்கு கின்ற
சோம்பேறிப் பரதேசி மரங்க ளோடு
நாலைந்து சேரிகளை நோக்கிக் கொஞ்சம்
நடநிழலே, அதன்பிறகு கவிதை நாக்கால்
'பாலைவனப் பசுஞ்சோலை' என்ப தைப்போல்
'பகல் இருட்டு' நீ என்று பாடு கின்றேன்.

பனிமலைப் பாடல்

(மூலம் : ரஷ்யக் கவிஞர் கோபுசோவ்)

இந்தியாவே,
இனிய நட்பிற்குத்
தாய்ப்பால் தரும் நதிநாடே,
உன்னை வாழ்த்துகிறேன்!

ஆழமான கவிதைகளின் வழியாக
எனது தாய்நாடு
உனக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புகிறது.

எங்கள் பால்ய நண்பனே,
பூந்தோட்டங்கள் நிறைந்த
டர்க்மேனிஸ்தானம்
இனிய நட்பின் தூதாகச்
சில வார்த்தைகளை உச்சரிக்கிறது.

பாடல்களாலும், நாட்டியங்களாலும்
கவிதை மந்திரத்தாலும்
உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனையும்
நாங்கள் வணங்குகிறோம்.

காந்தி

பூங்குவியலைப் போன்ற இந்தியாவே,
நமது நட்பின் பக்குவம்
இந்த யுகத்திலும் பிரதி பலிக்கிறது.
ஒரு இனிய பாடல்
பனிப்போர்வை மூடிய
இந்திய மலைச்சிகரங்களை மோதிப்
பள்ளத்தாக்குகளில் எதிரொலிக்கிறது.

அதே பாடல்
அதே இனிமையோடு
அந்தப் பள்ளத்தாக்குகளையும்
தாண்டிச் சென்று
இந்தியாவின் எல்லாத் திசைகளிலும்
யுகங்கள்தோறும் ஒலிக்கட்டும்.

விடுகதை

தத்துவத்தின் சித்திரமே, காலக் காற்றில்
சதிராடும் குலக்கொடியே, வான வெள்ளம்
முத்தமிடும் பச்சைவயல் செங்க ரும்பில்
முளைக்கின்ற வெள்ளைப்பூ உள்ளத் தோரே,
சித்திரையின் நிலாவெளிச்ச எழுத்தால் நாட்டைச்
சீர்திருத்தும் தலைமுறையின் தலைவா, ஈர
முத்திரையாய்ப் பனித்துளியை வளர்க்கும் மாலை
மோனத்தில் வளர்கின்ற தலைவா, வாழ்க!

தென்றலுக்கு நடைபாதை சோலை; யானைத்
தந்தத்தால் வலிமைபெறும் போர்த்தே ருக்கோ
தென்பாண்டி நாடுநடை பாதை; காதல்
சந்தத்தின் நடைபாதை கவிதை; வெள்ளித்
துண்டம்போல் நடைபழகும் சுனை நீ ருக்கோ
தூண்மலைகள் நடைபாதை; பாட்டு நாக்குக்
கொண்டாடும் உங்களுக்கோ சரித்தி ரங்கள்
குறித்துவைக்கும் புகழைநடை பாதையென்பேன்.

வைகைநதித் தண்ணீர்போல் அடக்கம்; சேரன்
வாகைவாளின் போர்முழக்கம்; சோழ நாட்டுப்
பொய்கையலைச் சங்கீதத் தெளிவு, நீலப்
புதையலைப்போல் கிடைத்த கடல் ஆழம் எல்லாம்
பெய்துவைத்த முழுப்படைப்பே, தமிழைக் கற்றுப்
பேசுகின்ற உயிர்யாழே, பூசைக் காகக்
கொய்துவைத்த பூவார்த்தை பழகு கின்ற
குலக்கிளியே, தமிழகத்தின் எழுத்து ஊற்றே.

அண்ணலே, என் ஆருயிரே, இதய நாட்டை
ஆள்பவரே, ஆயிரங்காலத்துப் பூவே,
கண்வழியே குடியேறிக் கனவைக் கொஞ்சும்
காதலரே, கண்ணீரில் குடியி ருக்கும்
கண்மணியே, காலத்தின் நிழலே, எங்கள்
கழனிகளைத் தொடுகின்ற மழையே, நெஞ்சப்
புண்வெளியைச் சந்திக்கும் மருந்தே, பாட்டுப்
புனல்வெளியில் குதிக்கின்ற அழகே, வாழ்க!

அத்திப்பூப் பூத்ததைப்போல், வான வீட்டில்
ஆடிநிலா முளைத்ததைப்போல், இந்த நாட்டில்
தித்திப்பு அரசியலை வளர்த்து வைத்த
திருவே, என் திருவருளே, கார்கா லத்து
முத்தென்பேன் மழைத்துளியை; சோக நாட்டின்
மூல தனம் என்றுரைப்பேன் விழியை; புள்ளி
வித்தைகளை வார்த்தைச்சீர் திருத்த மென்பேன்;
விடுகதையே, உம்மைநான் என்ன வென்பேன்?

சிவசேனை

'இந்தி'யரே எச்சரிக்கை! தெற்கு நாட்டார்
இதயத்தில் தீமூட்ட வேண்டாம்; பூவைப்
பந்தாடும் காற்றுப்போர் அன்றி நாட்டில்
பச்சைரத்தப் போரில்லை' என்று சொன்ன
தந்தையர்கள் வழிவந்தோர் நாங்கள்; பாட்டுச்
சந்தனத்தைச் சிந்தனையில் பூசிக் கொண்ட
இந்திரர்கள்! எங்களினம் வெகுண்டெ முந்தால்
இமயத்தின் பனிப்போர்வை கந்த லாகும்.

பசுக்கொடியால் விண்ணுக்கு முத்தம் வைத்துப்
பாராண்ட சிவாஜி மன்னன் நாட்டில் போரில்
பசுக்கொலையைத் தடைசெய்து வாழ்ந்த எங்கள்
பைந்தமிழர் கண்ணீரைச் சிந்து கின்ருர்;
பசும்புல்லா வசந்தத்தைப் பிரியும்? மாலைப்
பாட்டுவண்டா மதுமலரை வெறுக்கும்? நீல
விசும்பினையா ஈரவயல் மறக்கும்? எங்கள்
வீரத்தை யா வுலகம் மறந்து போகும்?

சிவசேனை ஆர்ப்பாட்டம் என்ன? அந்தச்
சிவனேவந் தெரித்தாலும் அச்ச மில்லை.
புவனத்தில் ஆழ்கடலில் மலையில் நாங்கள்
பொறித்துவைத்த கத்திப்போர்ச் சரித்தி ரத்தைக்
கவனத்தில் கொள்ளுங்கள்; தென்ன கத்தார்
கண்ணசைத்தால் பம்பாயே சாம்ப லாகும்!
உவாநாளின் விண்மீன்போல் ஆக வேண்டாம்!
உமிப்பதரே! நெல்வயலை எதிர்க்கவேண்டாம்!

மண் மின்னல்

பூவின் கனவெடுத்துப் புயலின் தினவெடுத்துப்
போதைக் கவிவடித்த பாவலன்—மனத்
தீவின் அலைக்கரத்தைத் திக்கெட்டிலும் விரித்துத்
தியாகப் பயிர்வளர்த்த காவலன்.
சேரும் அடிமையிருள் தேய்ந்து விடியுமெனச்
சேவற் குரல்கொடுத்த குயிலவன்—துயர்
ஆறு பெருகிவர ஆடும் விழிமழையில்
ஆடற் கலைபடித்த மயிலவன்.

காலக் கடல்வெளியில் கனவு நுரையுமிழ்ந்து
கவிதைக் கரைதொட்ட அலையவன்—இருள்
ஞாலத் திரைகடந்து நாளும் தவம்கிடந்து
ஞானத் தலைநிமிர்த்த மலையவன்.
ஈட்டி விரலசைவில் ஈகைத் திறம்வளர்த்த
ஈர மழையெழுத்துப் பாரியவன்—தனை
வாட்டும் பசிப்பிணியில் வறுமைப் படுகுழியில்
வாழத் துடித்தஉயிர்ச் சேரியவன்.

நீளக்கனவுகளில் நீந்தும் இலக்கியத்தின்
நீதிக் கண் திறந்த விண்தென்றல்—ஒரு
தாளவெறியோடு தணலின் வரியோடு
தாவிச் சுடர்விட்ட மண்மின்னல்.

நிலவு

தண்டில்லாக் குடையே, மச்சம்
தங்குகின்ற குளமே, வட்டத்
துண்டான உன்னை நாட்கள்
துண்டாடி விட்டால், சைவர்
கொண்டாடு கின்ருர்; இந்தக்
கொடுமையைக் கண்டிக் கின்றேன்!
வண்டாடல் அற்ற பூவே,
வான்விளக்கே, குளிர்கற் கண்டே!

தென்னவர் அடிமை வாழ்வு
தேயட்டும் என்று சொல்லிக்
கண்மணிநீ தேய்கின் ருயோ?
கலங்காதே, உரிமைப் போரில்
என்னினம் வெற்றி கொள்ளும்;
இனிமேலே காதல் மங்கை
தன்துணை பிரிந்தால் தான்உன்
தளிர்மேனி தேய வேண்டும்!

மயான பூமி

தாய்ப்பால் எழுதிய சரித்திர ஏட்டில்
தீயிடும் இடமே! சாவுப் பள்ளமே!
பருவக் கனவின் பசியை மறந்தே
இருவிழி தூங்கும் இரண்டாம் தொட்டிலே!

நெருப்புத் தீவே! நீண்ட மரணக்
கருப்பம் தரித்துக் கல்லறைப் பிள்ளைகள்
வளர்க்கும் தாயே! மானுட யாத்திரை
தளர்ந்து முடியும் தத்துவக் காடே!

பூங்குழல் மாதர் பூவிழுந் தழுதால்
பூமுடிக்கின்ற பூமாதேவியே!

உடலில் எரியும் உயிர்விளக் கணைந்தால்
சுடர்விளக் கேந்தும் சூனியக் காரியே!
தாய்ப்பால் எழுதிய சரித்திர ஏட்டில்
தீயிடும் இடமே, சாவுப் பள்ளமே!

காஞ்சி

பல்லவன் கொடிநிழல் எல்லையில் ஆடிய
பாட்டுத் தலைநகரம்—மலைக்
கல்லில் விழித்தெழும் கற்பனை மந்திரம்
காட்டும் கலைச் சிகரம்.

பூவிழி மன்னவர் புலவரைக் கைதொழும்
புண்ணியம் தழைத்தநிலம்—எங்கள்
தீவிழி மங்கையர் ஆவியில் காவியத்
தீபம் வளர்த்த இடம்.

ஆயிரங் காலமும் ஆடலில் ஊறிய
ஆழக் கனவு நிலம்—தமிழ்ப்
பாயிரமாகிய பாடல் அறிஞனைப்
படைத்த நனவுத் தலம்.

காலக் குரலுக்குத் தாளம் அமைத்தவர்
கல்லறைச் சுவர்க்கமிது—முள்
வேலியில் கூத்திடும் வேனில் மலரென
வெற்றி மலர்ந்த நிலம்.

வான்மழைப் பந்தலில் வாலிப மெய்திய
வயல்வெளி சூழ்ந்த இடம்—மனத்
தூண்களில் சரித்திரத் தோரணம் கட்டியெம்
தோழர்கள் வாழ்ந்த இடம்.

பல்லவன் கொடிநிழல் எல்லையில் ஆடிய
பாட்டுத் தலைநகரம்—மலைக்
கல்லில் விழித்தெழும் கற்பனை மந்திரம்
காட்டும் கலைச் சிகரம்.

காட்டாறு

மேகக் கூலஞன் மின்னல் தூரிகையால்
வேக மழைக்கோ(டு) இழுத்து, கானில்
வரைகின்ற பேசும் ஓவியம் நீ.

நீலக்கடலோ நீலவான் மழையின்
காலவழிப் போர்க்கோலம்; குட்டை ஏரியோ
மழையின் மௌனம்; நீயதன் உளறல்;

மூலநாளின் முதற்காலைப் பொழுதில்
ஞாலப் புதிரில் நடந்தபோது
ஊமையாகவே உலவினாய்நீ!
உன்னரு கிருந்து குயில்கள் பாடின.

ஒருநாள் முதல்மழைப் பாடல் ஒலித்தது
பாட்டுக் குயில்கள் ஊமையாயின
ஊமைஆறுகள் பேசத் தொடங்கின.

மலைமகள் உலர்த்தும் மாநெடுங் கூந்தல்
நீயென நினைத்தே காட்டு மரங்கள்
உன்மேல் பூக்களை உதிர்க்கின் றனவோ?

நீளும் ஆரே நீரின் அணிவகுப்பு
பாழும் நீயோ அதன்படை யெடுப்பு;
இயற்கை வெளியிடும் இதய உணர்ச்சி நீ;
புயலெனும் காற்றின் புனல்வடிவம் நீ;
எங்கள் ஆத்மாவைப் பேசவைத்துப்
பதில்பெற எழுந்த இயற்கையின் கேள்வி நீ;
கவிதையோ அறிவின் கையெழுத்து
காட்டாறேநீ மழையின் கையெழுத்து;
நீர்மேல் எழுத்து நிலைப்பதில்லை,
நீரின் எழுத்தோ அழிவதில்லை;
காட்டாறே ஒருரகசியம்: நீதான் கவிஞன்;
நானேஉனது தொகுப் பாசிரியன்!

மனித வாழ்வில் மாறுதல் நிகழும்!
திருடன் திருந்தலும் தீமை நன்மையாய்
மறுபிறப் பெடுத்தலும் மன்பதைச் சூழலில்
அதிசயமில்லை, எனக்கோர் ஆசை

ஒருமுறை ஒரேஒருமுறை இந்த மாறுதல்
இயற்கைச் சூழலில் நிகழவேண்டும்
நீயே முன்னின்று நிகழ்த்திக் காட்டேன்!
தீயினை நீராக்குக; தீவினை நதியாக்குக!
ஆக்கினால்
ஆயிரம் கவிதைப் பரிசு தருகிறேன்!

வியத்நாம்

கிழக்கு வானமே கிழக்கு வானமே
கங்குல் சகதியில் சந்தனப் பூச்சுகள்
நடத்தும் உன்கை நாடகம் போதும்!
விடியல் என்றொரு மந்திரப் பொழுதை
விண்ணக வீதியில் விட்டெறிந் திடுக!
விண்மீன் என்னும் கனவுப் பூக்களை
விரிகடல் குப்பையில் வீசி எறிக!
நிலவுப் பாற்குடம் மலைகளை மோதி
நிலத்திடை வீழ்க! நிலத்திடை வீழ்க!
சூரிய தீபமே! சூரிய தீபமே!
ஆயிரங் காலங்கள் அணைந்துபோய் விடுக!
இளஞர் சேனைகள் எழுக!
இதய வேல்கள் விளைக!
வியத்நாம் என்றொரு ரத்த பூமியில்
ஆதிக்கப் பேய்களின் யாத்திரை முடிப்போம்!
கால்,கை முளைத்த புயல்களே, விழியெனும்
வாள்களைச் சுழற்றுக!
வாலிப மலைகளே வருக!

குழந்தை

கோடிக் கனவுகள் ஆடி வருகுது—மலர்க்
கூட்டம் எழுந்துயி ரோடு வருகுது;
மோடிக் கவிதையின் ஏடு வருகுது—இன்னும்
முற்றுப் பெருததோர் பாடல் வருகுது;
காலக் கடலிலோர் ஓடம் வருகுது—மனக்
காட்டை உழுதிடப் பொன்ஏர் வருகுது;
ஞால இருட்டிலோர் விடியல் வருகுது—புது
ஞானக்கலைகளின் படையல் வருகுது;

காலை வெயிலிலோர் நிலவு வருகுது—மனக்
காதல் அணிந்திரு கால்கள் வருகுது;
சோலைமலருடன் வண்டு வருகுது—சிறு
தோளை அசைத்தொரு தூதுவருகுது;
பேதை விழிகளின் கனவு வருகுது—மொழி
பேசத்தெரியாத மனது வருகுது;
ஆதிமனிதனின் ஆவி வருகுது—எடுத்(து)
ஆளமுடியாத உவமை வருகுது;

தாய்மை அணிந்திடும் மாலைவருகுது—மண்ணில்
தவழுகின்றதோர் கோயில் வருகுது;
வாய்மைக் கோட்டையின் கொடியும் வருகுது—பால்
வார்த்து வளர்த்ததோர் செடியும் வருகுது;
பூவில் கிடந்ததோர் புதையல் வருகுது—இந்தப்
பூமி மடிதேடி மின்னல் வருகுது;
சாவின் நிழலிலோர் வாழ்வு வருகுது—உயிர்ச்
சாலை வழியொரு பறவை வருகுது.

சாரல்

[கம்பம் பள்ளத்தாக்கில் சாரல் மழைக்காலம் தொடங்கி விட்டது. அந்தச் சாரல் வெறி என் பேனுவையும் பிடித்துக் கொண்டது.]

சாரல் அம்ம சாரல்—மலைச்
சாரல் ஓரம் சாரல்!
ஈரஈரமாக வந்து
ஈட்டியான சாரல்!

மண்ணில் மீன்கள் பிடிக்க—மழை
வானம் வீசும் தூண்டில்;
கன்னி மின்னல் ஒளியில்—அது
கூட்டும் கண்ணீர்த் தூண்கள்!

சாரல் அம்ம சாரல்—மலைச்
சாரல் ஓரம் சாரல்!
உழவன் மேனிப் பன்னீர்—இங்கே
உலவும் மேகக் கண்ணீர்.

அழகுப் புல்லின் பொட்டு—காற்றில்
அலையும் தண்ணீர்ச் சொட்டு;
சாரல் அம்ம சாரல்—மலைச்
சாரல் ஓரம் சாரல்!

வானம் எறிந்த கலைகள்—மண்ணில்
வாழும் கலையின் விதைகள்;
மோனமோன மானமொளன—மூலம்
சொல்லும் கதைகள்;
சாரல் அம்ம சாரல்—மலைச்
சாரல் ஓரம் சாரல்!

யாத்ரீகன்

தொடுவான் என்றொரு தொட்டிலில் ஒளிமகள்
தூங்கும் பொழுதினில் போகிறேன்;
தோல்களில் புரட்சியின் தூதுகள் சுமந்தே
தூரதூரங்கள் போகிறேன்;
பருவங்கள் தூரிகை ஆய்விடும் நாள்களில்
பாழ்களில் வளர்ந்திடும் ஓவியமே!
பால்யங்கள் வாலிப காலங்கள் முதுமைகள்
பயணங்கள் நடத்திடும் சூனியமே!

ஓ! என்கூடே, உயிர்த்தாய் நாடே!
விஷத்தில் அமிர்தத் துளிகளைப்போலே
விண்ணில் மீன்கள் பூத்தன;
வளர்பிறை என்றொரு வழிப்போக்கன்உன்
வாசதீபங்கள் ஏற்றினன்;
வான் வெளியெங்கும் யாத்திரைக் கனவுகள்
வாவா எனக்கும் விடை தருவாய்!

வானக வெளிச்சங்கள் மண்வெளி மீதில்
யெளவன மலராய்ச் சுடர்கையிலே
வையகம் என்றொரு மண்குதி ரைக்குப்
பாதைகள் எல்லாம் கடிவாளம்.
வாலிப தினங்களே, வணக்கம் வணக்கம்
வருகிறேன், நானொரு யாத்ரீகன்.

சூரியகாந்தி

(மூலம் : சங்கர குரூப்)

நாணச் சுகத்தில் கவிழ்ந்த என்முகம்
ஒரு தீண்டுதலில் நிமிர்ந்தது;
ஒளிவட்டமாய்ச் சுழன்ற சூரியனின்
இனிய கேள்விகள்
காற்றில் மிதந்து வந்தன:
"இளைய சகோதரியே, நீ யார்?
வியப்பின் பிரவாகச் சுழிப்பே
பார்வையாகி வட்டமிட

நீண்டநேரமாக என்னைப் பார்த்தபடி
ஒரே இடத்தில் ஏன் நிற்கிறாய்?
என்னிடத்தில் ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"
நான் என்ன பதிலைச் சொல்வேன்?
நினைவுகளை வசப்படுத்தக்கூட
என்னால் முடியவில்லையே!
அங்கோ...
உலகம் வணங்கும் சூரியன்!

இங்கோ...
வாசமற்ற ஒருமலர் வட்டம்!
'சூரியகாந்தி' என்று என்னை
அழைப்பார்கள்.
ஒளித் தெய்வத்தின்மீது
நான் காதல் கொண்டேன்.
இந்தக் காதலுக்குப் பிறகு
என்மீது உலகம் வீசிய வசையே

எனது பெயராக உருவெடுத்தது போலும்!
வசைமொழி ஒரு போர்வாள்;
எனது தெய்வீகக் காதல்
அதன் கூர்மைக்கு முன்கூடத்
தலை வணங்கிய தில்லை;
எப்போதும்
ஏசுதலின் பின்புலத்தில்
எனது காதல் சங்கமமானதில்லை;

எல்லையற்ற வியப்புடன் நின்றேன்,
சூரியனின் ஒளிமுகத்தைப் பார்த்தேன்;
அவன் என்ன நினைத்திருப்பான்?
மீண்டும் வியப்படைகிறேன்.
எத்தனையோ இரவுகளில்
எதற்காகவோ
நான் ஆனந்தக் கண்ணீர் சிந்துகிறேன்.
விடியலின் வெளுப்பில்

நான் மலர்கிறேன்...
தென்றலில் சிலிர்க்கிறேன்...
எனது தவம் எனக்குச்
சுமையாகத் தெரியவில்லை.
ஆனால் அது என் நாயகனின்
புகழுக்குத் திரையாகி விடுமோ
என்று நான் அஞ்சுகிறேன்.
எனது காதல் கதை

எப்பொழுதும் உச்சரிக்கப் படாமலே இருக்கட்டும்.
முடிந்தால் அதை என் தலைவன்
புரிந்து கொள்ளட்டும்.
காதலின் பரிசோ சூனியம் தான்!
ஆனல் காதலோ
அறிவின் அறிவாக வளர்கிறது!
காதலைத் தவிர ஒரு இன்பமும் இல்லை.
ஆனல் சோகம்

காதலின் முறிவில் தான் பிறக்கிறது!
காதல் தெய்வீகமான தாகவே
இருக்கட்டும்!
அது காலத்தையும்
உலகப் பெருவெளிகளையும் வெற்றிகொள்ளட்டும்!
எனது ஆத்மா
எனது தேவனின்
மந்திர ஒளிமுத்தத்தைப் பெற்றுவிட்டது.

அவனது ஒளிபட்டு
என்னுள் நான் எரிகிறேன்.
என் சோகங்களை
என் தலைவனும் அறிவான் போலும்!
என்னைப் பிரியும்போது
அவனது முகம் வாடுகிறது;
எங்களிடம் வார்த்தைகள் தோற்றன.
மௌனத் திரைகளாக

எங்கள் முகங்கள் மாறியபோது
இருள் திரை பரவியது.
அவனது பார்வை மங்கியதும்
என் தலை சாய்கிறது!
மீண்டும்
ஒரு தூக்கமற்ற
நெடிய இரவுக்குப் பிறகு
விடியலின் தெளிவில்

என் தேவன் வருவான்...
இதே வயல் வெளியில்
என்னைத் தேடுவான்...
சாவின் சுவாசத்தைப் போன்ற
தென்றலின் சூட்டினில்
நான் பிணமானேன்.
அப்போது என் நாயகன்
என்முகத்தைப் பார்த்தான்...

அவன் விழி அழுதது...
ஒரு கறுப்பு மேகத்தால்
கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.
"ஓ! அந்தக் காதல் மலரை
நான் சந்திக்க வில்லையே!
இனிய காதல் வார்த்தைகளை
இன்னும் நாங்கள் உச்சரிக்க வில்லையே!"
என்று புலம்பினான்.

காந்தி

விமர்சனக் கவிதைகள்

1. உலக்களம்

ஞான அரவணைப்பில்—பிறந்த
மோன மதுநினைப்பில்—மின்னும்
நாட்டியச் சிந்தனை ஒப்பனை கூட்டியே

நாடகம் ஆடிடும் மேடை—இது
பாடகனின் நெஞ்ச ஓடை!

வெறியில் ஊறியதாய்—வரி
வரியாய்த் தேறியதாய்—உண்ண
வீரம் விளைத்திடும் உணர்ச்சி நிரம்பிய

வேகக் கவிதையாம் கிண்ணம்—இது
தாகம் தணித்திடும் சின்னம்.

கோழைக் குணம் நொறுங்க—இன்பம்
ஏழையரை நெருங்க—நெஞ்சில்
கொதித்துக் கிடந்தவெறி குதித்துக் கவிதையெனக்

கொண்டதடா உயிர்க் கோலம்—சுரங்
கண்டதடா பழங்காலம்!

உதைத்துக் களிப்பவரின்—நாம்
கொதிக்கக் குளிர்பவரின்—நெஞ்சை
உடைக்கும் படைக்கலனைக் கொடுக்கும் உலக்களந்தான்

ஊக்கந்தரும் இந்தப் பாட்டு—உன்
ஏக்கம் தவிர்த்திடு கேட்டு!

கற்பனைச் சொர்க்கமடா—இது
கனியின் வர்க்கமடா—இதில்
காணும் கவிதைகள் மானுடத்தை அதன்
கதியில் உயர்த்துவதால்—என்
கனவை வளர்த்ததடா!

இந்த மதுக்கடையை—கவி
தங்கும் பொதுமடையை—என்
இதயகீதத்தால் திறக்கும் போதில் நான்
என்னைத் துறந்து விட்டேன்—இந்த
மண்ணை மறந்து விட்டேன்.

நெஞ்சில் இவன் வாசன்—தமிழ்
கொஞ்சும் காமராசன்—இவன்
நித்தியம் போற்றிடும் சத்தியக் கற்பனை
நிழலில் பிறந்தவைகள்—இவை
நினைவில் நடப்பவைகள்!

— எஸ். கே. எஸ். சாகுல் அமீது

2. சிந்தனைகள்

புதிதாகப் பெருக்கெடுக்கும் பொன்னி ஆற்றின்
புறப்பாடு; சுவைசுமந்த பூத்தேன்கூடு;
உதிராமல் இனி,இனிய இலக்கி யங்கள்
உயிர்வாழும் என்பதற்கும் உறுதிப்பாடு!
இதுபோதும்! நிலவிருக்க மெழுகு வர்த்தி
எதற்காக? இப்படிக்குச் சீனிவாசன்.

— ம. பெ. சீனிவாசன்

R. SHANMUGAM
M.A., M. LITT., DIP. ANTHROP (MADRAS)
M.A. LINGUISTICS (CORNELL UNIV., U. S. A.)
Reader in Dravidian Languages
Department of Languages,
MADURAI UNIVERSITY,
MADURAI 2 (India.) '64

எமது அடுத்த வெளியீடு:

இறைவன் நரகத்திற்குப் போனபோது...

(கவிதை நாடகம்)

ஆசிரியர்: நா. காமராசன்

சேக்ஸ்பியரின் Antony and Cleopatraவைப் போல — நாடகப் பாங்கும் கவியழகும் ததும்பும் நாடகத்தைத் தமிழில் வடிக்க ஓர் இளைஞன் மேற்கொள்ளும் முயற்சி இது.

பாவைப் பதிப்பகம்
இராயப்பேட்டை
சென்னை - 14